இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 15-05-2025

# போர் மேகங்களுக்குள் புகையும் மர்மங்கள்!

பயங்கரவாத – தீவிரவாதச் செயல்களுக்கு பின்னணியாக மட்டுமல்ல – முன்னணியாகவும் இருக்கும் பாகிஸ்தான் மீது இந்திய ராணுவம் நடத்திய தாக்குதல் குறித்த தகவல்களை ராணுவம் தரப்பில் இருந்து வெளியிட்டுள்ளார்கள்.

**“இந்திய ராணுவத்தின் திறன்களை வெற்றிகரமாக வெளிப்படுத்தும் வகையில் ‘ஆபரேஷன் சிந்தூர்’ அமைந்தது. இந்தியாவின் நோக்கங்களை அடைய பல்வேறு துல்லியமான ராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. தீவிரவாதிகளின் 9 தளங்கள் மீது ஒருங்கிணைந்த துல்லியமான ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பாகிஸ்தானில் 4 தீவிரவாத முகாம்கள், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 5 தீவிரவாத முகாம்கள் தாக்கி அழிக்கப்பட்டன. லாகூர் உட்பட, பாகிஸ்தான் முழுவதும் உள்ள வான் பாதுகாப்பு அமைப்புகளை அழிக்க காமிகேஸ் ட்ரோன்கள் ஏவப்பட்டன” என்று இந்திய ராணுவம் கூறியிருக்கிறது. இவை அனைத்தும் வரவேற்கத் தக்க நடவடிக்கையே.**

பயங்கரவாத அமைப்புகள் தனித்துச் செயல்பட்டாலும், ஏதாவது ஒரு நாட்டின் பின்னணியில் இருந்து செயல்பட்டாலும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தி பாடம் கற்பிக்க வேண்டியது கடமையாகும். அத்தகைய கம்பீரமான செயலை இந்திய ராணுவம் செய்துள்ளது.

பயங்கரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கைக்குப் பின்னால், பயங்கரவாதச் செயல்களை ஆதரிக்கும் பாகிஸ்தான் மீது போர் தொடுக்கும் செயல்களை இங்கு யாரும் விமர்சிக்கவில்லை. ஆனால் இந்த போருக்குப் பின்னால் வெளிவரும் செய்திகள் சர்ச்சைக்குரியதாக இருப்பதை மறுப்பதற்கு இல்லை.

ஏனென்றால் இந்தியா – பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளுக்கு இடையிலான போர் நிறுத்தப்படுகிறது என்பதை இந்தியா அறிவிப்பதற்கு முன்னால், பாகிஸ்தான் சொல்வதற்கு முன்னால் அமெரிக்க அதிபர் டிரம்ப் சொல்லி விட்டார். இது இந்தியாவுக்கு பெருமை தரும் செயல் அல்ல.

குஜராத் முதலமைச்சராக இருந்த போது மோடி ஒரு பேட்டி அளித்திருக்கிறார். **“பாகிஸ்தான் நம்மைத் தாக்கிவிட்டுச் சென்று விட்டது. பாகிஸ்தான் மும்பையில் ஒரு தாக்குதல் நடத்தியது. உடனே நமது அமைச்சர் அமெரிக்கா போய் அழ ஆரம்பித்து விட்டார். ‘ஒபாமா! ஒபாமா! அவர்கள் எங்களைத் தாக்கிவிட்டுப் போய்விட்டார்கள். காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள்’ என்று. இது என்ன மாதிரியான செயல்? பக்கத்து நாட்டுக்காரன் தாக்கிவிட்டுப் போனால் நீ அமெரிக்கா போவதா? பாகிஸ்தானுக்குப் போயேன்”** என்று சொன்னவர் அன்றைய மோடி. ஆனால் இன்று அவரது ஆட்சி காலத்தில் என்ன நடந்திருக்கிறது? அமெரிக்க அதிபர் என்ன சொல்கிறார்?

**“நாங்கள் இந்தியா – பாகிஸ்தான் இடையேயான அணுசக்தி மோதலை நிறுத்தினோம். அது ஒரு மோசமான அணுசக்தி போராக இருந்திருக்கலாம் என்று கருதுகிறேன். அப்படி நடந்திருந்தால் மில்லியன் கணக்கான மக்கள் இறந்திருக்கலாம். நீங்கள் இருவரும் போரை நிறுத்தவில்லை என்றால், நாங்கள் எந்த வர்த்தகத்தையும் செய்யப்போவதில்லை என்று நான் கூறினேன்”** என்று சொல்லி இருக்கிறார் டிரம்ப்.

**அமெரிக்க அதிபர் டிரம்ப் வெளியிட்ட தகவல்களுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசுதான் விளக்கம் அளிக்க வேண்டும். ஆனால் அமெரிக்க தலையீடு குறித்து தனது உரையில் பிரதமர் மோடி விளக்கம் அளிக்கவே இல்லை. ‘நான் சொல்லித்தான் போர் நிறுத்தம் செய்யப்பட்டது’ என்று டிரம்ப் சொன்னதற்கும் பதில் சொல்லவில்லை. ‘மூன்றாவது நாட்டின் தலையீடு’ குறித்தும் மறுத்துப் பேசவில்லை. ‘காஷ்மீர் விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்யத் தயார்’ என டிரம்ப் கூறியதை பிரதமர் மோடி மறுத்திருக்க வேண்டாமா? தனது 25 நிமிட உரையில் அமெரிக்க தலையீடு குறித்து பேசுவதை தவிர்த்தார். எதிர்க்கட்சிகளின் சந்தேகங்கள், கேள்விகளுக்கும் பிரதமர் மோடியின் உரையில் விளக்கம் தரப்படவில்லை. போர் நிறுத்தத்தில் மூன்றாவது நாட்டின் தலையீடு இருந்ததா என்பதற்கும் பிரதமர் மோடி விளக்கம் தரவில்லை.**

போர் நிறுத்தமாவது முறையாக நடக்கிறதா என்றால் அதுவும் இல்லை. 10 ஆம் தேதியன்று மாலை 5 மணிக்கு போர் நிறுத்தம் என அறிவிக்கப்பட்டது. ஆனால் அன்றைய இரவும் பாகிஸ்தான் தனது தாக்குதலைத் தொடர்ந்தது. 12 ஆம் தேதியன்று இந்தியா – பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் பேச்சுவார்த்தை தொடங்கியது என்று மதியம் 12 மணிக்கு தகவல்கள் சொல்லப்படுகிறது. இந்தியா – பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் இடையே ஹாட்லைன் மூலம் பேச்சுவார்த்தை தொடங்கியது என்றும், இரு தரப்பிலிருந்தும், ராணுவ நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநர்கள் (DGMO) பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள் என்றும் செய்திகள் அதிகாரப் பூர்வமாகச் சொல்லப்பட்டன.

இரவு 8 மணிக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார். ஆனால் இரவில் என்ன நடந்தது? எல்லையில் பாகிஸ்தான் மீண்டும் அத்துமீறல் செய்தது. சம்பா மாவட்டத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. ஜம்மு, காஷ்மீருக்குள் ஊடுருவ முயன்ற பாகிஸ்தான் ட்ரோன்களை, பாதுகாப்புப்படையினர் சுட்டு வீழ்த்தி இருக்கிறார்கள். போர் நிறுத்தம் செய்யப்பட்டதாக இந்தியப் பிரதமர் அதிகாரப்பூர்வமாக விளக்கம் அளித்த பிறகு, பாகிஸ்தான் எப்படி அத்துமீறல் செய்கிறது? அப்படியானால் போரை இருதரப்பும் இல்லாமல், ஒரு தரப்பு மட்டுமே செய்ததா?

‘ஆபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கைக்குப் பிறகு 12 ஆம் தேதி இரவு 8 மணிக்கு முதன்முறையாக நாட்டு மக்களுக்கு உரையாற்றினார் பிரதமர் மோடி. **“அடி தாங்க முடியாமல் பாகிஸ்தானியர்கள் நம்மை தொடர்பு கொண்டு பேசினார்கள். இந்தியா அடித்து நொறுக்கியதால் போர் நிறுத்தத்திற்கு பாகிஸ்தான் கெஞ்ச வேண்டிய சூழல் ஏற்பட்டது. பாகிஸ்தான் டி.ஜி.எம்.ஓ. நமது ராணுவத்தை தொடர்பு கொண்டு போர் நிறுத்த கோரிக்கை வைத்தார். பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் அடியால் தாக்குதலை நிறுத்துவதாக பாகிஸ்தான் ஒப்புக்கொண்ட பின் நாம் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டோம். போர் நிறுத்தம் தற்காலிகமானது தான். நமது படைகள் பாகிஸ்தானை கண்காணிக்கின்றன. இனிமேல் அவர்கள் அத்துமீறினால் முகத்திலேயே தாக்குவோம்”** என்றார் பிரதமர் மோடி.

**அவர்கள் போர் நிறுத்தத்துக்கு முன்வந்தார்கள் என்றால், மீண்டும் ஏன் தாக்குதல் நடத்துகிறார்கள்? போரில் முதலில் மரணிப்பது உண்மைதான் என்பார்கள். உண்மை மறைகிறது. மர்மம் உயிர்வாழ்கிறது.**

## தெப்பக்காடு யானைகள் முகாமில் ரூ.5.06 கோடி செலவில்

# 44 குடியிருப்புகளுடன் கட்டப்பட்ட ‘மாவூத்’ கிராமம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**நீலகிரி, மே 15**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2025) நீலகிரி மாவட்டம், தெப்பக்காடு யானைகள் முகாமில் 5 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் 44 அரசு குடியிருப்புகளுடன் கட்டப்பட்டுள்ள யானை பாகன்களுக்கான மாவூத் கிராமத்தை திறந்து வைத்தார்.**

மேலும், முதுமலை புலிகள் காப்பகத்தில் தமிழகத்திலேயே முன்னோடியாக 15 கி.மீ. நீளத்திற்கு தொரப்பள்ளி முதல் தெப்பக்காடு வரை 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள வான்வழித் தொகுப்பு கம்பிகளின் (Aerial Bunched Cable) சேவைகளை தொடங்கி வைத்து, வன சரகர்களின் பயன்பாட்டிற்காக 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 32 வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2025) நீலகிரி மாவட்டம், தெப்பக்காடு யானைகள் முகாமில் 5 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் 44 அரசு குடியிருப்புகளுடன் கட்டப்பட்டுள்ள யானை பாகன்களுக்கான மாவூத் கிராமத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, வனத்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம், முதுமலை புலிகள் காப்பகத்தில் உள்ள தெப்பக்காடு யானைகள் முகாமானது யானைகளை பராமரிப்பதில் தலைசிறந்து விளங்கும் முகாம் ஆகும். இம்முகாமிற்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் வருகை புரிந்தார்.

**44 அரசு குடியிருப்புகளுடன் கட்டப்பட்டுள்ள மாவூத் கிராமத்தை திறந்து வைத்தல்**

யானைகளை பராமரிக்க தமிழ்நாடு வனத்துறையில் மாவூத் மற்றும் காவடி என நிரந்தர பணியாளர்கள் உள்ளனர். அவர்களின் அர்ப்பணிப்பு உணர்வை கவுரவிக்கும் விதத்தில், தெப்பக்காடு யானைகள் முகாமில் 5 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் 44 அரசு குடியிருப்புகளுடன் கட்டப்பட்டுள்ள யானை பாகன்களுக்கான மாவூத் கிராமத்தை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார். பின்னர் அக்குடியிருப்புகளுக்கான சாவிகளை பயனாளிகளுக்கு வழங்கி, குடியிருப்புகளை பார்வையிட்டு, அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

**தொரப்பள்ளி முதல் தெப்பக்காடு வரை 15 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள வான்வழி தொகுப்பு கம்பி சேவையினை தொடங்கி வைத்தல்**

தமிழ்நாட்டில் 2024-25ல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி மொத்தம் 3036 யானைகள் வனங்களை வாழ்விடமாக கொண்டுள்ளது. மேலும் நீலகிரி கிழக்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள முதுமலை புலிகள் காப்பகத்தில் மொத்தம் 2253 யானைகள் இடப்பெயர்ச்சிக்காகவும், சுமார் 440 யானைகள் நிரந்தர வாழ்விடமாகவும் கொண்டுள்ளது. முதுமலை புலிகள் காப்பகத்தின் உள்மண்டலத்தில் மட்டும் 5 கிராமங்களில் மொத்தம் 180 காட்டுநாயக்கர் குறும்பர் மற்றும் மலசர் ஆகிய பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர்.

உள்மண்டல பகுதியில் செல்லும் மின்சார கம்பிகள் காப்பிடபடாத கம்பிகளாக (Bare Wire) இருப்பதனால் வன விலங்குகளுக்கு தீங்காக அமைய வாய்ப்பு உண்டு. எனவே, யானைகளின் புகலிடமாக திகழும் முதுமலை புலிகள் காப்பகத்தில் தமிழ்நாட்டிலேயே முன்னோடியாக 15 கி.மீ. நீளத்திற்கு தொரப்பள்ளி முதல் தெப்பக்காடு வரை 5 கோடி ரூபாய் செலவில் வான்வழி தொகுப்பு கம்பிகளாக (Aerial Bunched Cable) மாற்றப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் தொடங்கி வைக்கப்பட்டது.

**வன சரகர்களின் பயன்பாட்டிற்காக வாகனங்களை வழங்குதல்**

களப்பணியில் அயராது உழைக்கும் வன சரகர்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு உயிரியல் பன்முகத்தன்மை மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான பசுமை திட்டம் மூலமாக 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 30 பொலிரோ வாகனங்கள் மற்றும் 2 சிறப்பு ரோந்து வாகனங்கள் (All Terrain Vehicles), என மொத்தம் 32 வாகனங்களை முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மேலும், தெப்பக்காடு யானைகள் முகாமில் உள்ள யானைகளுக்கு முதலமைச்சர் அவர்கள் கரும்புகளை வழங்கினார். அத்துடன் அங்கு பணிபுரியும் ஆஸ்கார் விருது பெற்ற ‘The Elephant Whisperers’ ஆவணப் படத்தில் இடம் பெற்ற ரகு எனும் யானைக் குட்டியின் பராமரிப்பாளர்களான பொம்மன், திருமதி பெல்லி தம்பதியர்கள் உள்ளிட்ட மாவூத் மற்றும் காவடிகளுடன் கலந்துரையாடி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, வனத்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தெப்பக்காடு யானைகள் முகாமில் யானைகளுக்கு கரும்புகளை வழங்கி மகிழ்ந்தார்!





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2025) நீலகிரி மாவட்டம், தெப்பக்காடு யானைகள் முகாமில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதுமலை புலிகள் காப்பகத்தில் தமிழகத்திலேயே முன்னோடியாக 15 கி.மீ. நீளத்திற்கு தொரப்பள்ளி முதல் தெப்பக்காடு வரை 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள வான்வழி தொகுப்பு கம்பிகளின் (Aerial Bunched Cable) சேவைகளை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் திருமதி துர்கா ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, வனத்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.5.2025) நீலகிரி மாவட்டம், தெப்பக்காடு யானைகள் முகாமில் பணிபுரியும் மாவூத் மற்றும் காவடிகளுடன் கலந்துரையாடி, குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில் திருமதி துர்கா ஸ்டாலின் உடனுள்ளார்.